"Strychnine" is the chief alkaliod present in "Strychnos nux vomica". It is a more powerful stimulant action on the motor cells of CNS especially on Spinal Cord stimulating the pain and tactile sensations. Thus acting on all types of VADHA DISEASES.

(2) <u>வெள்ளை பூண்டு - Allium Sativum</u>

பூண்டு கார்ப்பு சுவையை உடையது, இச்சுவை வளி கூறை தன்னிலைப்படுத்தும் குணம் உடையது. மேலும் அகட்டு வாய்வகற்றி செய்கை உடையது.

''சன்னியொடு வாதந் தலை நோவு தாள்வலி...''

என்ற வெள்ளுள்ளியின் பொது குணத்தால் உணரலாம்.

Allicin is the chief alkaloid constituent of this / Garlic, Allicin has anti inflammatory activity due to its anti-prostaglandin effect, The oil extract can be applied as a massage in case of Synovial fluid inflammation and in case of Rheumatoid arthritis considered as a type of Vadha disease.

<u>3. ஆயில் பட்டை - Chukrasia tabularis</u>

இதன் சிறப்பு பண்பு - வளி முதலான தோடங்களையும், இதன் செய்கை முத்தோடமகற்றி என்பதாலும் வளி, அழல், ஐயம் மூன்றும் தன்னிலைப்படுத்தும் என்பதை உணரலாம்.

''ஆயி'' லடுபுன லனலையடு நெற'' - என்ற அடிகளால் முக்கூறையும் சீராக்கும் குணமாகும் என்று உணர்க.

It forms as a basic antivadha drug,

4. நல்லெண்ணெய் - Sesamum indicum

நல்லெண்ணெய்க்கு உள்ளழலாற்றி செய்கை உண்டு, மேலும் தொக்கணத்திற்கு சிறந்தது.

Sesamin is the main ingredient of this medicated oil. Sesamol is a phenolic acid, anti oxident.

The oil is well digested and absorbed. It is a vehicle for fat soluble substance. Due to presence of vitamic - c, it acts as anti - oxidant, The oil is highly stable and will not go rancid. So forms the base for ointments, and skin oils used in our Siddha system of medicare.

Gingely oil will prevent the formation of ANTI KELOIDAL SCAR. This oil is used for massage is Physiotherapy.

பால் - Milk

Milk forms the base for Purifying process in our systems.

பாலில் எட்டிக் கொட்டையை ஊற வைப்பதன் மூலம், அதன் நச்சுத்தன்மை நீக்கப்படுகிறது. பால் சிறந்த உள்ளழலாற்றியாகவும், முக்குற்றத்தையும் போக்கும் தன்மை உடையது. இது பாடாணங்களையும், நச்சு தாவரங்களையும் தூய்மை படுத்தும்.

High mineral content helps in purification process.

ஆகவே "இலகு விடமுட்டி தைலம்" சகல வாத ரோகத்திற்கும் தொகணமாக (Massage) பயன்படுத்தலாம்

இலக்கணம் மீறிய மரபுகள்

விழுவதும் வீழ்ந்து கிடப்பதும்
எழுவதும் எழுச்சி பெறுவதும்
கிடப்பதும் கிடந்தே இருப்பதும்
காலச் சூழலின் நொடிப்பொழுது நிகழ்வு
கிளைகளை குறுக்கிய போன்சாய் மரமா
உந்தன் முயற்சி...
சிறகுடன் தொலைத்த பறத்தல் அல்ல
உந்தன் எழுச்சி...
கடலுடன் கரையைக் கரைத்தல்
அலையின் பயிற்சி...
என்றோ மறையும் கரைக்கு
யுகத்தின் யுகமாய் ஏனிந்த துடித்தல்
அதற்கே தெரியும் முயற்சி என்பது திருவினையாக்கும்
இலக்கணம் மீறிய மரபுகள் மட்டுமே
-இன்றே வெல்லும்
ஆட்டுக் கொட்டிலில் அடைபட்ட வேங்கை குட்டியின்
உதட்டுச் சாய "சித்தர்கள்"
இலக்கணம் மீறி இலக்கியம் தொலைத்து
புது சரித்திரம் படைப்போம் புறப்படுவீர்!!!

மரு. செந்தில்குமார்
முதலாமாண்டு எம்.டி.(சி)

சைவ சித்தாந்த சாத்திரங்களும் சித்தர்களும்

மரு.ந.ஆரிஃப், (எம்.டி) சித்தா

*"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்
கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே".*

Either to I considered the body as a despicable one. Now I realise it as the Sanctum Sanctorum of the Universal being so I preserve it with utmost care.

என்று பாடிய திருமூலர் தந்த தமிழ் ஆகம நூலான திருமந்திரத்தில்தான் 'சைவசித்தாந்தம்' என்ற சொல் முதன்முதலாக ஆளப்பட்டிருக்கிறது. சைவ சித்தாந்தம் என்ற தொடர் சைவம் + சித்தாந்தம் என்று பிரிந்து நிற்கும். இவற்றுள் சைவம் என்பதன் பொருள் :

"சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது" என்கிறது திருமந்திரம்

"சிவம் என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியது சைவம்"

என்பது குன்றக்குடி அடிகளாரின் விளக்கம்.

சிவம் என்பது என்ன ?

"தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

- திருவாசகம்

'எந்த நாட்டிலும் இறைவன் என்று போற்றப்படுகின்ற, அதே பொதுவாக உள்ள இறைவனைத்தான் தமிழ்நாட்டில் சிவன் என்று போற்றுகிறார்கள்' என்பது மாணிக்கவாசகர் தந்த திருவாசகம்.

ஆகவே, சைவம் என்பது உலகத்தில் நாம் வாழும்போதே இறப்பைப் பற்றிய அச்சத்தை வென்று வாழும் வழிமுறையைக் குறிக்கும்.

சித்தாந்தம் என்பதன் பொருள் என்ன ?

இது சித்தம் + அந்தம் எனும் இருசொற்கள் அடங்கிய கூட்டுச்சொல்.

சித்தம் - கொள்கை (System of thought)

அந்தம் - முடிவு (Conclusion)

"It is the Conclusion reached by a refutation of all system aliens of thought."

சித்தாந்தம் என்பது மெய்யுணர்வு, திளைப்புணர்வு, பரஞானம் எனவும் பொருள்படும். சித்தாந்தம் என்ற சொல்லுக்குச் சிந்தனையின் முடியும் எனவும் தத்துவ நெறியில் அறிவார்ந்த கருத்துக்களின் விளைவாகக் கிடைத்த முடிவு எனவும் பொருள் கொள்ளலாம்.

சைவசித்தாந்தம் என்பதை ஒரு தொடராக வைத்துப் பொருள் காணும் பொழுது "சைவத்தின் முடிந்த முடிவு" எனப்படும்.

சைவத்தின் உட்பிரிவாகப் 'பாசுபதம்,' 'காபாலம் ' முதலாக அறுவகையுண்டு. அவற்றை ஆராய்ந்து, வேண்டாதன விலக்கி, வேண்டுவன கொண்டு, இந்நாட்டிற்கே உரித்தாய்த் தொன்றுதொட்டு வந்த சைவத்துடன் கூட்டி முடிந்த முடிவாகக்கொண்ட சமயமே சைவசித்தாந்தம்.

<u>காலப் பின்னணி :</u>

பல்லவர்காலம் கி.பி.300 முதல் 900 வரை ஆகும். இக்காலத்திற்கு முற்பட்டது சங்ககாலம். இக்காலத்தில் சைவ சமயம் பற்றிய கருத்துகள் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துபாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படுகின்றது.

மேலும் சைவ சித்தாந்தத்தின் தொன்மையை 'சிவம்' என்ற சொல்லின் தோற்றத்தினை ஆராய்வதன் மூலம் அறிய முடியும்.

சிவம் என்ற சொல் வேதகாலத்தில் தோன்றிய இருக், யசுர், சாம வேதங்களிலும் காணப்படவில்லை, புறநானூறு போன்ற மிகப்பழைய தமிழ் நூற்களிலே கூட காணப்படவில்லை. ஆனால், புறநானூற்றிலே சிவபெருமானை குறிக்கும்.

''நீலமணி மிட்றொருவன்'', ''கறை மிடற்றண்ணல்'' என்னும் சொல்கள் காணப்படுகின்றன.

சைவ சித்தாந்தமும், ஆகும் நூலும் தமிழருக்கே உரியதாக இருந்தும், சிவம் என்ற சொல் பழைய தமிழ் சங்க நூல்களில் காணப்படாததற்க்கு காரணங்கள் வரலாற்று காலத்திற்க்கு முன்பு நடந்த சம்பவங்கள் உணர்த்துகின்றது.

தென்னகத்தில் ஆக நூல்கள் தமிழ் அறிஞர்களிடையே மனப்பாடமாக இருந்தது. ஆனால் ஏடுகளுக்கு கொண்டுவறப் பட வில்லை. தென்னகத்தில் நிகழ்ந்த அநேக கடற்கோள்களினால் தமிழர்கள் எல்லாத் திக்குகளிலும் ஓடினார். தமிழ்களும், நாகர்களும் சிந்து, கங்கை சமவெளியை அடைந்தனர். இவர்களால் ஆகமங்கார் சொல்லாட்சியாக அங்கிருந்த வடமொழியில் ஓலைக்சுவடிகளில் எழுதப்பட்டது. எனவே, தமிழக, நாகர் பரம்பரையிலுதித்த அரசர்களிடையே சைவ சித்தாந்தம் மிகச் சிறப்பாக போற்றி வளர்க்கப் பட்டது. அங்கு ஏற்பட்ட ஆட்சிக் குலைவினால், தென்னகம் வந்த வாகடர்களும், பல்லவர்களும் சைவ சிந்தாந்தம் வளர வழிவகுத்து தந்த போதும் வடமொழியிலேயே வலுப்பெற் றிருந்தது.

தென்னகத்தில் ஆகும் நூலின் கருத்துகளை முதன்முதலில் இனிய தமிழில் தந்தவர் திருமூலர். இவர் திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்களாக கூறியுள்ளார். இது பன்னிரு திருமறைகளில் பத்தாம் திருமறையாகும்.

இந்நூல் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது.

1. பொது அதிகாரம் 2. சிறப்பு அதிகாரம்

இதில் பொது அதிகாரத்தின் இரண்டு இயல்களான பிரமாய இயலும், இலக்கண இயலும் சித்தமருத்துவத்தின் அடிப்படையாக உள்ள அருவுருப்பொருள்களான பதி, பசு, பாசம் இவற்றின் உண்மை விளக்கத்தையும் இலக்கணத்தையும் தெளிவுறுத்துகிறது.

பதி, பசு, பாசத்தை விளக்கும்படியே சிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிவாலயங்களில் சிவலிங்கத் திருவுருவமும், திருவுருவத்திற்கு முன்னர் நந்தியும் பலிபீடமும் இடம்பெறுகின்றன. இவை சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளிலக்கணங்களையே சிவலிங்கம், நந்தி, பலிபீடம் முறையே உணர்த்துகிறது.

<u>சித்தர் பாடல் அமைப்பு</u>

இவர்கள் பழைய தமிழ் இலக்கணங் களையும், மரபுகளையும்பொருட்படுத்தாது, கற்றறிந்த புலவர்க்காக மட்டும் எழுதாமல் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் நாட்டுப்புறப் பாடல் வடிவிலும் கும்மி, சிந்து, கண்ணி என்னும் பாவகைகளைக் கொண்டு 'மக்கள் இலக்கியம்' ஆக அமைத்தனர்.

இவை கேள்விநடை, பழமொழி நடை, பேச்சு நடை, வியப்பு நடை, உருவக நடை, குறிப்புத்தொடர் தடை, விளிநடை போன்ற அமைப்பில் உள. இதில் முன்னிலைப்படுத்திக் கூறும்பாங்கே மிகுதியாகக் காணப்படுகின்றது. பெண், மக்கள், மனம், பிறபொருள்கள், மாணவன் ஆகியவற்றை முன்னிலைப் படுத்தியுள்ளனர். எல்லாப் பாடல்களிலும் புராண இதிகாசக்கதைகள், இலக்கிய மேற்கோள்கள், சமுதாய உவமைகள், தத்துவ உவமைகள் ஆகியன விரவியுள்ளன.

<u>சித்தர்கள் சமுதாயப்பற்று :</u>

சித்தர்கள் யோகச்செயல்முறையினால் உடலினை நிலைக்கச்செய்து மெய்ம்மை

யுணர்ந்து, சமுதாயத்தை நன்னெறியில் செலுத்த விரும்பியவர்கள். இவர்கள் உண்ணாமல், உறங்காமல், இடம் பெயராமல், வெயில், மழை, பகல், இரவு என்று பாராமல் இருந்து சமாதி நிலையை அடைந்தவர்கள். இவ்வாறு சமாதி நிலையிலிருந்து வெளிவரும்போது தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

சித்தர்கள் மூட நம்பிக்கைக்கு இடந்தரா தவர்கள். சடங்குகளையும், சடங்குகளோடு கூடிய வழிபாடுகளையும் அறவே வெறுத்தனர். கடவுள் பெயர்கள் பலவாக இருப்பினும் 'இறைவன் ஒருவனே' என்ற கருத்தை வலியுறுத்தினர்.

சித்தர்கள் மக்களின் சமுதாய வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். பாடுபட்டு ஈட்டிய பொருளைத் தவறான வழிகளில் செல்கின்ற மக்களை கண்டித்தனர்.

சாதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது பிறப்பினால் தோன்றவில்லை, செய்கின்ற தொழிலுக்கேற்ப பிரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் இழிவான செயல்களைச் செய்பவனே கீழ்ச் சாதியினன் என்றும் உரைத்தனர்.

சாத்திர நூல்களின் தனித்தன்மை :

சைவசமய நூல்களைச் சாத்திரங்கள், தோத்திரங்கள் எனப்பகுக்கலாம். சாத்திரங்கள் அறிவு நூல்களாகும். தோத்திரங்கள் பன்னிரு திருமறைகளாகும். இவை யாவும் அன்பு நூல்கள்.

சைவசித்தாந்தம் சிவாகமங்களின் பொருளாகக் கருதப்படுகிறது. இது திருமுறைகளை அடுத்துத்தோன்றிய சித்தாந்த சாத்திர நூலாகும்.

திருமூலர் கண்ட உள்பொருள் என்ன ?

திருமூலர்க்கு பின்வந்த சங்கரர் (கி.பி 788 - 820) ''அத்துவிதம்'' என்ற கொள்கையைத் தெளிவுபடுத்தியவர். இவர் ''பிரம்மம் அன்றே உள்பொருள், உலகம் பிரம்மத்தின் தோற்றமே'' என்ற கொள்கையை பரப்பினார். இவர் பிரமம் எனக்கூறுவது உடம்பு தோறும் திகழும் உணர்வுக்கு அடிப்படையாக உள்ள உயிரையே. இவரது கொள்கை ''கேவலாத்துவிதம்'' எனவும் கூறப்படும்.

இ.ராமாநுசர் (கி.பி 11 ஆம் நூற்றாண்டு). இவர் ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தங்களின் பக்தி நெறிக்கு மாறுபடாதபடி பிரம்ம சூத்திரங்களுக்கு உரைசெய்து சங்கரர் கொள்கையை மறுத்துக்கூறினார். இவரது கொள்கை விசிட்டாத்துவிதம். அதாவது, இறுதியான உண்மை ஒன்றே என்றாலும் அவ்வொன்று விசேடணத்தோடு (Attributes) கூடியது எனவும் அவ்விசேடணம் யாதெனில் பிரம்மத்துக்கு உலகு, உயிர்கள் என இரண்டு உடல்கள் உண்டு என்பதேயாம்.

இராமநுசருக்கு பின் வந்தவர் மெய்கண்டார் (கி.பி 13 ஆம் நூற்றாண்டு). இவரே சைவசித்தாந்தை வளர்த்தவர். மெய்கண்டாருக்கு பின் வந்த மத்துவரின் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) கொள்கைகள் மெய்கண்ட சாத்திரங்களின் பொருள் நிலையைத் தெளிவாக உணர்தற்கு உதவும்.

பகுத்தறிவாகிய மனவுணர்வை ஒருங்கே பெற்றுக் கல்வியறிவொழுக்கங்களால் வாழ்க்கையில் மேன்மேலும் உயர்ச்சி பெறுவதற்குரிய விழைவு, அறிவு, செயல் என்னும் மூவகையாற்றலையும் முழுமையாய் செயல்படுத்தி,

இன்று விருட்சம்போல் நிற்கும் நமது மருத்துவத்தின் வேர்களாகிய சைவ சித்தாந்த கருத்துகளில் தெளிந்த ஞானம் கொண்டு, அதன் அடிப்படையில் நிறைமொழிமாந்தர் தந்த மருத்துவத்தை ஆராய்ந்து நிலைபெறச் செய்வோம்.

நிலா

நீ பெண்ணா ஆணா
ஆடையெடுத்து தைப்பதற்கு

சி. பிரபு
ஐந்தாம் ஆண்டு

விழித்தெழு

மாக்கள் வரைந்த
வட்டத்தினால் - அவர்கள்
விதைத்த
சாதி வித்தினால்
முளைத்த முட்டாள்கள்
வைத்த பற்றினால்
ஊறியது வெறி
நேர்ந்தது யுத்தம்
யுத்தத்தில் ஏந்திய கத்தியினால்
பெருக்கெடுத்து ஓடியது
மனித இரத்தம்
மறைந்து ஓடியது
மனிதாபிமானம்
சரித்திர ஏட்டை
புரட்டி பார்
பலகோடியில்
சிலரே சாதனையாளர்கள்
அவர்கள் சாதனையாளர்களாகவே
பிறக்கவில்லை
ஏனெனில் எந்த கருப்பையும்
அவன் பிறப்பை
தடுக்கவோ, தள்ளி வைக்கவோ
முடியாது
அவன் உருவாக்கப்படவில்லை
காரணம் அவன்
களிமண் பொம்மையில்லை
நம்பிக்கையுடன்
விழத்தெழு
நாளைய உலகம் உன் கையில்

செ. க. சுரேசு
மூன்றாம் ஆண்டு

சுவாசத்திற்கு சுவாசக் குடோரி மாத்திரை

சித்த மருத்துவ கண்ணோட்டம்

நீ. புவனேஸ்வரி
சௌ. சிவசங்கரி
இறுதியாண்டு

நோக்கம் :

அறிவியல் மயமாக்கப்பட்ட இந்த உலகில் கிருமியின் காரணமல்லாமல் வரும் நோய்களிலே ஆஸ்துமாவும் ஒன்று. இன்றைய நிலையில் இந்த நோய் பெரும்பான்மையான மனித சமுதாயத்தை வாட்டி எடுக்கிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தற்காலத்தில் தவிர்க்க முடியாதவைகளான வாகனங்களிலிருந்து வெளிப்படும் தூசுகளும், வாசனைப் பொருள்களும், கால நிலை மாறுபாடுகளும் சுவாசப்பாதையில் ஒவ்வாமையை ஏற்படுத்தி மார்பை இறுக்கி மூச்சுத் திணறலை உண்டாக்குவதுதான் இதற்கு முதற் காரணமாக கூறப்பட்டுள்ளது.

இதற்கு சித்த வைத்திய திரட்டில் உள்ள சுவாசகுடோரி மாத்திரையை பரிந்துரை செய்யலாம். இம்மாத்திரை எவ்வாறு நோயின் வன்மையை குறைக்கிறது என்பதை இக்கட்டுரையில் விளக்க உள்ளோம்.

இம்மாத்திரையை செய்யும் முறை :

'வெள்ளெருக்கம் பூ மிளகு வேண்டிச்சரி
நிறையை தள்ளா தரைத்து தனிக்குன்றி -
விள்ளொன்று தாளிசபத்திரி குடிநீரில் தாக்கச்
சுவாசமுடன் கோளிருமல் காசமிலை கூறு''

என்ற சித்தர்பாடல் மூலம் வெள்ளெருக்கம்பூ, மிளகு இவற்றை சரி நிறையாக எடுத்து கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி ஒன்று (அ) இரண்டு மாத்திரையை தாளிசபத்திரிக் குடிநீரில் கொடுக்க சுவாசகாசம், இருமல் தீரும்.

சுவை - பஞ்சபூதம் - முக்குற்றம் தொடர்பு ஒரு - கண்ணோட்டம் :

பஞ்ச பூதங்களின் கூடுதலாலேயே சுவை பிறக்கிறது. ஆதலின் சுவைகளின் பூதச்சேர்க்கையை அறிந்து குற்றங்களை சமப்பபடுத்தலாம். குற்றங்கள் சமநிலையில் இருந்தால் நாடிகளின் மாத்திரைகளும் சமநிலையில் இருந்து பிணிகள் வராமல் தடுக்கும்.

வெள்ளெருக்கம் பூவின் பண்புகள் : Colotoropis Procero

வெள்ளெருக்கம் பூ கைப்பு, கார்ப்பு, மதுரம் சுவைகளை உடையது. இதில் முதன்மை சுவையான கைப்பின் தொழிலால் வெப்பு, மூர்ச்சை, அழற்சி, கபம் ஆகியவற்றின் விகற்பத்தை சாந்தியடைய செய்வதால் இரைப்பின் முதல் குற்றமான கபம் சாந்தியடைவது மட்டுமல்லாமல் இரைப்பு நோயாளிகளின் மூச்சுத்திணறலையும் குறைக்கும் தன்மை வெள்ளெருக்கிற்கு உள்ளது. இவ்வாறு 'கபமல்லாது சுவாசகாசம் வராது'' என்ற வாக்கிற்கிணங்க கைப்பு சுவையுள்ள வெள்ளெருக்கம் பூ கபத்தை தன்நிலைக்கு கொண்டு வருவதால் 'சுவாச குடோரியில்' சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் தன்மையில் வெப்ப நிலையை அடைந்து, பிரிவில் கார்ப்பை அடைவதால் கபத்தால் உண்டான கெடுதல்கள் கார்ப்பின் தொழிலால் நீக்கப்படுகிறது.

''மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி
னேயகற்றி
யுன்னு பணிப்பணியை யோட்டுதலாந்
சொன்னேன்
எருக்கெனவே பூமியினிலே விளங்கும்
அருக்க மருக்கெனலாமே''

என்பதை தேரையர் வெண்பா மூலம் அறியாலம்.

மிளகில் Piper Nigrum கைப்பு, கார்ப்பு சுவைகள் இருந்த போதிலும் இதில் கார்ப்பே மேலோங்கி நிற்பதால் கோழையை அறுத்து வெளியேற்றி விடுகிறது.

"உற்றிடும் ஐயநாடி ஓங்கியே துடித்து நின்றால்
பற்றிடும் யிருமலீ ளை பதறியே இரைப்பு
நோயுண்டாகி
மெத்தவே கோழை வாயு மிகுந்திடும்.

என்ற வரிகளால் கார்ப்பு பிரிவை அடைந்த மிளகு கபத்தை சமப்படுத்துவதன் மூலம் "ஓங்கி நின்ற ஐயநாடியானது குறைகிறது" என்பதை அறியலாம்.

"சீதசுரம் பாண்டு சிலேத்மங் கிராணி குன்மம்
வாதம் அருசிபித்தம் மாமூலம் - ஓதுசன்னி
யாசமபஸ், மாரம் அடன்மேகம் காசமிவை
நாசங்கறிமிளகினால்"

என்ற அகத்தியர் குணவாகடம் மூலம் மிளகால் சுவாசகாசம் நாசமாகும் என்பதை அறியலாம்.

தாளிசபத்திரியில் (Toxus baccata) உள்ள கார்ப்பு சுவையால் கபத்தால் உண்டான கெடுதல்கள் நீக்கப்பட்டு வெப்பத்தின் தன்மையால் கோழை அறுக்கப்படுவதால் தாளிசபத்திரி சேர்க்கப்பட்டுள்ளது.

"நாசி களப்பிணிகள் நாட்பட்ட - காசஞ்சு
வாசம் அருகி வனமங்கால் - வீசுவரு
மேகமந்தம் அத்திசுரம் விட்டேகிந் தாளிசத்தால்
ஆகுஞ் சுகப்பிரசவம்

மேலும் தாளிசபத்திரியில் உள்ள Ephedrine என்ற வேதிப்பொருளால் மூச்சுக்குழலானது (Ephedrine Orally active bronchodilator) விரிவடைகிறது. இதனால் மூச்சத்திணறல் குறைகிறது.

முடிவுரை :

வெள்ளெருக்கம்பூ கபக்குற்றங்களை சமப்படுத்துகிறது. மிளகு கோழையை இருமல் மூலம் வெளியேற்றுகிறது. தாளிசபத்திரி மூச்சுக்குழல் விரிவடைவதன் மூலம் மூச்சுத்திணறலை குறைக்கிறது.

இவ்வாறு இரைப்பு நோயாளிகள் நம்மிடையே கூறும் குறிகுணங்கள் சுவாசகுடோரி மாத்திரையின் விளைவால் வெகுவாக குறைந்து குணமடைகின்றனர்.

மேலும், வெள்ளெருக்கம் பூவுடன், மிளகு, கிராம்பு இவை முறையே 1:1:1/2 பங்குகளாக எடுத்து துளசிசாறு விட்டரைத்து பயன்படுத்துவதில் மேற்கண்ட முறையை விட வெகு சீக்கிரத்தில் இரைப்பு நோயாளியின் குறிகுணங்கள் மாறுகிறது .

சான்று : குணபாடம், மூலிகை.

போதையின் பாதையில்

சிகரெட் மனிதனின் ஆயுளில் 15 வருடங்களைக் குறைக்கிறது.
புற்றுநோய்க்கான காரணங்களில் 30% சிகரெட்தான்.
சிகரெட் பிடிப்பதால் தினமும் 30 லட்சம் மக்கள் இறக்கிறார்கள்.
சிகரெட் பிடிப்பவர்களுக்கு இதய நோய் வரும் வாய்ப்பு 70 அதிகம்.
ஒரு சிகரெட் மனிதனின் ஆயுளில் 5 நிமிஷத்தைக் குறைக்கிறது.
சிகரெட் 808° 'இ' - ல் எரிந்து புகைகிறது.
ஒரு சிகரெட்டில் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் 4700 ரசாயனப் பொருட்கள் உள்ளன.
புகைப்பிடிப்பதால் உடலிலுள்ள வைட்டமின் 'சி' அழிகிறது.
புகையிலையில் 19 விஷங்கள் உள்ளன.

பபிலா ஆக்னஸ்
மூன்றாம் ஆண்டு

நிலா காலம்

மலரில் தேனெடுக்க வரும்
பட்டாம் பூச்சியை
ஓடி
பிடித்து மகிழ்ந்தது ஒரு காலம்....

கிணறு கிணறாக
நீச்சல் பைத்தியம் பிடித்து
அலைந்தது ஒரு காலம்....

நண்பர்களுடன்
கூடி
விளையாடி மகிழ்ந்திருந்தது ஒரு காலம்....

முதன் முதலாக பிடித்த
மீனை
ஓடி வந்து கிணற்றில் விட்டு மகிழ்ந்தது ஒரு காலம்....

தென்னை மட்டையும்
ரப்பர் பந்துமாய்
கிரிக்கெட் பைத்தியம் பிடித்து விளையாடியது ஒரு காலம்...

ஆனால்
இத்தனை காலத்திற்கும் மேலாக....
அது....

க. செல்வக்குமார்
இறுதியாண்டு

இலிங்க மாத்திரை - ஓர் பார்வை

து.பொ. சங்கீதா
மூன்றாம் ஆண்டு

சேரும் சரக்குகள் :

1. சுத்தி செய்த இலிங்கம் - 1 பலம் (35gm)

2. பொறித்த வெங்காரம் - 1 பலம் (35gm)

3. பூண்டு - தேவையான அளவு

செய்முறை :

இலிங்கம் மற்றும்வெங்காரத்தை கல்வத்தி லிட்டு தோல் உரித்த வெள்ளை பூண்டை சிறிது சிறிதாக சேர்த்து மெழுகு பதமாக அரைத்து குன்றி அளவு மாத்திரைகளாக செய்து கொள்ளவும்.

பயன்படுத்தும் முறை :

வேண்டும்போது ஒரு மாத்திரையை வாயில்போட்டுக் கொண்டு உமிழ்நீரை சேர்த்து விழுங்கவும்.

தீரும் பிணிகள் :

1. சுவாச காசத்தால் உண்டான இரைப்பு உடனே குணமாகும்.

2. வயிற்றிலுள்ள வாய்வு

3. இடுப்பு வலி

4. சுரம் முதலியன தீரும்

பத்தியம் : இச்சா பத்தியம்

<u>நோய் தீர்க்கும் விதம் :</u>

<u>சித்த மருத்துவ கண்ணோட்டம்</u>

இலிங்கம் : (HG_2S)

பொது குணம் :

"பேதி சுரம் சந்தி பெருவிாண நீரொடுத

காதகடி காசம் காப்பான்புண் - ணோத"

"நிலத்தி லெழுந்த பிணி நீங்காக் கிரந்தி

சலத்துடனே சூலை வெடிதான கற்றும் - பலத்தாம் "

இது சுரம், காசம், சூலையை போக்கும். இது 'நிலத்தி லெழுந்த பிணி' - பிருதிவி பூத உறுப்புகளில் உண்டான பிணி போக்குகிறது. இதற்க்கு வெப்பவீரியம் உடையதால் 'வன்னி கர்ப்பம்' என்று பெயர்.

செய்கை : உடல் தேற்றி (Alterative)

வெங்காரம் : (Borax)

சுவை : இனிப்புடன் கூடிய துவர்ப்பு

தன்மை : வெப்பவீரியம்

ஐம்பூத தத்துவப்படி :

இனிப்பு = மண் + நீர்

துவர்ப்பு = மண் + காற்று

இரண்டு சுவையிலும் மண்ணின் கூறு இருப்பதால் பிருதிவியின் பண்பு வாத பொருமலை போக்கும்.

மற்றும் இதில் இனிப்பு சுவை உடையதால் மண் + நீர் பூதங்கள் உள்ளது. இவ்விரு பூதச் சேர்க்கையைக் கொண்டுள்ள ஐயத்தால் வருநோயில் மேற்படி சுவையைப் பயன்படுத்த ஐயம் வளர்ச்சியடையும். தீப்பூதம் சம்பந்தமுள்ள சுவையுள்ள பொருட்கலான இலிங்கம், பூண்டோடு இது சேர்த்து வழங்கும்போது ஐயம் சமப்படும். அதாவது 'எதிர்உரையில்' அடங்கும்.

வெங்காரம் இனிப்பு சுவையை உடையதாயினும் வெப்ப வீரியத்தை உடையது.

"வெங்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும்"

பொதுகுணம் :

"....சங்கரிக்கு
மூங்கன லுதவியில்லா வுதரத்தில் வாயு மாற்றும் பொங்கிய இருமல் மாந்தம் போக்கிடும் முண்மை தானே".

இது வாதம், பொங்கிய இருமல், மாந்தம் போக்கும்.

பூண்டு (Allium Sativum) :

பொது குணம் :

"சன்னியொடு வாதந் தலைநோயு தாள்வலி
மன்னிவரு நீர்க்கோவை வன்சீதம்"

இது வாதம், நீர்க்கோவை, (அ.கு)

நாட்பட்ட இருமல், சீதம் போக்கும்.

ஐம்பூத தத்துவப்படி :

சுவை : கார்ப்பு, தன்மை : வெப்பம் ; பிரிவு : கார்ப்பு

கார்ப்பு = காற்று + தீ

கார்ப்பு சுவையில் வளிக்கூறு இருப்பதால் அது வளர்சிதை மாற்றத்தை (Metabolism) சீர்படுத்துகிறது. அதனால் இது உடல்தேற்றி மற்றும் உடல்உரமாக்கியாக செயல்படுகிறது.

இதில் உள்ள தீக்கூறினால் கோழையகற்றியாக (carminative) செயல்படுகிறது. சுவாச காசத்தில் உண்டான இரைப்பு குணமாகும்.

நோய் தீர்க்கும் விதம் :

சுரம்

"குடல் தனில் சீதமலாது சுரம் வராது "

சுரத்திற்கு முதல் காரணம் சீதம் மிகுவதுதான். சீதத்தை குறைத்தால் சுரம் குறையும். எனவே சீதத்தை குறைக்க வெப்பவீரியமான இலிங்கம், வெங்காரம், பூண்டு மூன்றையும் சேர்த்து கொடுக்கும்போது சுரம் குறையும். சுரத்தை நீக்குவது மட்டுமல்லாது இம்மூன்றும் உடல்தேற்றி யாகவும் செயல்படுகிறது.

இடுப்பு வலி (சூலை)

"நெடுவாத சார்பதுவுமின்றி சூலை வராது "

சூலைக்கு காரணம் வாதம் அதிகபடுதலாகும். இலிங்கம், வெங்காரம், பூண்டு மூன்றுமே வெப்பவீரியம் இருப்பதால்.

வெப்பவீரியத்தின் தொழில் :

வாதத்தை சமன்படுத்தும், கபத்தை நீக்கும் விரைவில் செரிப்பித்தல் ஆகும்.

எனவே இது சூலையை (இடுப்பு வலியை) போக்குகிறது.

வயிற்றிலுள்ள வாய்வு :

வயிற்றிலுள்ள வாய்வை குறைப்பதற்க்கு பூண்டு ஒன்றே போதுமானது. பூண்டில் தீ கூறு இருப்பதால், இதற்க்கு 'அகட்டுவாய்வகற்றி' செய்கை, மற்றும் பசித்தீதூண்டியாக செயல்படுகிறது.

எனவே வாயு நீங்குவதோடு மட்டுமல்லாது

பசியும் கொடுக்கும் பூண்டு.

சுவாச காசத்தால் உண்டான இரைப்பு :

"கபமல்லாது காச சுவாசம் வராது"

சுவாச காசத்திற்கு முதல் காரணம் கபம் அதிகபடுவதே ஆகும். எனவே இந்த வெப்பவீரியமுடைய இலிங்க மாத்திரை கபத்தை குறைக்கும் எனவே சுவாச காசமும் குறைந்து. அதன் மூலம் இரைப்பு சரியாகும்.

According to modern concept :

சுவாச காசத்தால் உண்டான இரைப்பு :

Asthma - In this condition wheezing, cough, difficulty to expire, inflammation and hypersensitive of air way to a variety of stimulus.

Ig E level is increased in this condition.

Courses of IG E increased condition :

Immunoglobulin E is increased as a result of person's infested with intestinal worms and in diseases involving parasites, protozoa.

Although E-coli is a normal commonest of human G.I. tract, it has long been known a sa cause of diarrhoea, dysentry (painful bowel movements) in infants, childrens and adults.

Pathology of the disease:

In IG E increased condition, when the antigens enter the body, immediately the antibodies IGE come and find with receptors present in most cells. From the most cells Listamine, Prostaglandlin, leukotriens are realeased.

Histamine are responsible for the hypersensitivity and cause inflammation over the mucus membrance of bronchus. So during respiration mucus membrance are not able to be rate a simple stimuli. As a result severe cough occurs.

Pharmacology of ligani pills :

orax : The Sodii Biboras (வெங்காரம்) present in the pills will act as sedative to the mucus membrance in irritable conditions of the pharynx in chronic brochities.

A few grains of borax or boric acid will sometimes remove an obstinate cough in young childrens and especially if this be associated with an irritable condition of the pharynx.

Allium Sataivum (Garlic) :

If contain a active principle 'allicin' which is responsible for anti - bacterial effect like inhibiting the growth of E-coli, salmonella thyposa, Shigella dysentriae, and micrococcus pyogens are reported.

'Scordine' is present in Garlic reported to posses fungicidal and anti-microbial activity.

It act as 'Anti-Choleric', 'Anthelmintic' Metallic complexes of 'allicin' reported to be active against gram - ve and +ve bacteria and also to some fungi.

It is a powerful natural cleanising and disinfecting medicine.

It aids digestion, adsorption of food.

It has a special influence over the bronchial and pulmonary secretion useful in the cases of dilated bronchi with feotid expectoration, diminishes cough.

Conclution :

By giving the ligani pills, the garlic present in it act as anti-bacterial aganist Salmonella, E-coli etc. It act as anthelmentic. The IGE production as a result of their bacterial diseases is decreased. Thus further inflammation is prevented.

Inflammed pharynx are "sedated' by Borax and the garlic act as expectorant to remove the mucus from the pharynx and bronchus.

Lingam present in the pills act as

Alterative. i.e. It act as alter the morbid process of nutrition and excretion restoring in some unknown way. The normal function of the lung (or) Respiratory System without producing any obvious immpression of any of the organs of the body.

ஆதாரம் :

1. கண்ணுசாமி பரம்பரை வைத்தியம்.

2. The wealth of India.

3. Robinsons - Pathalogy

4. Principle of Biochemistry - Ambika Shanmugam

5. தோற்றகிரக ஆராய்ச்சி

6. Physiology - Muthiya

முதல் குரல்

கள்ளிப் பாலு ஊத்த நெனைக்கும்
கள் மணம் கொண்ட ஆத்தா
கள்ளம் கபடம் இல்லாத எனக்கு
கள்ளியா முத உணவு...

அப்பன் ஆத்தா பசிக்கு - நான்
அவசரமாய் இரையாயிட்டேன்
ஆத்தான்னு கூப்பிடும் முன்னே - என்னை
அடக்கிடத்தான் நெனக்கிறீங்களே!

ஆத்தா அவ வயித்துல இருக்கையிலே
ஆயிரம் கனவு நான் கண்டேனே!
ஆரிராரோ பாடாம என்னை
அடக்கம் செய்ய நெனைக்கிறீங்களே!

என் சோட்டு பிள்ளைகளோ
எகிறி குதிச்சு விளையாட - என்
தொப்புள் கொடியின் ஈரந்தான் காயலையே - என்னை
தொலைச்சிடத்தான் நெனைக்கிறீங்களே! இதுநியாயமா ?

க. பாஸ்கரன்
மூன்றாம் ஆண்டு.

விழி செய்த சதி

இரு பத்து வயதிலே, இழுவிழி முன்னிலே
தேடுகிறது பருவம், தடுக்கிறது நாணம்
துடிக்கிறது இதயம், மறைகிறது வெட்கம்
கண்களிலே மயக்கம், மனதினிலே தயக்கம்
புத்தியிலே கலக்கம், இனி எங்கு உறக்கம்
உளளத்திலே எண்ணம், எங்கேயோ இன்பம்
ஒரு முறை கண்டதாலே, பிறந்தது இந்த குழப்பம்

-பொன். த. எழி,. செல்வன்
நான்காம் ஆண்டு

Quitting Smoking

B.Anuradha
K.V.Jayanthi
Final Year

Advantages within 20 minutes

1. Blood pressure drops to normal.
2. Pulse rate drops to normal.
3. Body temperature of hand & feet increases to normal.

Within 8 hours

1. Carbon monoxide level in blood drops to normal.
2. Oxygen level in blood increases to normal within 24 hours.
3. Chance of heart attack decreases.

Within 48 hours

1. Nerve endings start regrowing.
2. Ability to smell & taste is enhanced.

Within 2 weeks to 3 months

1. Circulation improves
2. Walking become easier
3. Lung function increases upto 30%

Within 1 to 9 months :

1. Coughing, Sinuses, congestion, fatigue, shortness of breath decrease.
2. Cilia regrow in lungs, increasing ability to handle mucus, clean the lungs, reduce infections.
3. Body's overall energy increases.

Within 1 year :

1. Excess risk of coronary heart disease is cut by half.

Within 5 years :

1. Lung cancer death rate for average forever smoker (one pack a day, decreases by almost half.)
2. Stroke risk is reduced to that of a non-smoker 5 -15 years after quitting.
3. Risk of cancer of the mouth, throat and Oesophagus is that of a smoker's.

Within 10 years :

1. Lung cancer death rate similar 10 that of non - smokers.
2. Pre cancerous cells are replaced.
3. Risk of cancer the mouth, throat, oesophagus, bladder, kidney decreases.

Within 15 years

1. Risk of coronary heart disease is that of a non-smoker.

நீதித் தராசின் நிலைமை

நீதி தேவதையே!
சனநாயகத்தின் பேரில்
எச்சரிக்கை விடுக்கிறேன்
சுதாரித்துக் கொள்!
இல்லையெனில்
நீயே ஊர்ஊராக
வந்து கேட்ட விலைக்கே
கொடுத்தாலும்
நிச்சயம் விலை போகாது
உன்
நீதி தராசு!

ச. சசிகுமார்
இறுதி ஆண்டு

சாந்த சந்திரோதய மாத்திரை

ஓர் ஆய்வு

ச. இந்திரா
மூன்றாமாண்டு

இன்றைய இயந்திர உலகத்தில் உள்ள நம் ஒவ்வொருக்கும் கிருமி தொற்று (Infection) என்பது சாதாரணமாகிவிட்டது. இதிலிருந்து நம்மை காக்க இறைவனே உடலில் பல பாதுகாப்பு அம்சங்களை கொடுத்துள்ளான். இந்த பாதுகாப்பு அம்சங்கள் உடலில் புகும் கிருமிகளுக்கு எதிராக போராடுகின்றன. இதன் காரணமாக நம் உடல் வெப்பநிலை சற்று உயர்கிறது. இந்த நிலையே சுரம் என்று நம்மால் வழங்கப்படுகிறது.

சித்த மருத்துவத்தில் சுரத்தை போக்க பல மருந்துகள் இருந்தாலும் சிறந்தது என சாந்த சந்திரோதயத்தை கூறினால் அது மிகையாகாது. சாந்த சந்திரோதயம் பல நோய்களை போக்கக் கூடிய நன்மருந்தாயினும். இங்கு அது எவ்வாறு சுரத்திற்கு பயன்படுகிறது என்பதை சித்த மருத்துவத்தின் கண்ணோட்டத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சாந்த சந்திரோதயம் :

சேரும் சரக்குகளும் அளவும் :

வெங்காரம்	:	1/2 பலம்
இரச கற்பூரம்	;	1 பலம்
கப்பு மஞ்சள்	:	3 பலம்

செய்முறை :

வெங்காரம், இரசகற்பூரம், கப்புமஞ்சள் இவற்றை மேற்கூறிய அளவுப்படி நிறுத்தெடுத்து சுத்தித்து பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றால் 4 சாமம் அரைத்து மிளகளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தவும்.

அனுபானம் : தேன்

தீரும்பிணி : பித்த சுரம்

வெங்காரம் : (Borax)

"குடல்தனில் சீதமிலாது சுரம் வராது ''

என்றபடி,

''வெங்காரம் சேத்துமத்தை வேறு பண்ணுமே
கடுகு
தங்கு சில நீர்முறிய தான் வாங்கும்''

எனவே வெங்காரமானது சேத்துமத்தை போக்கும். அதனால் சுரத்தை தணிக்கும்.

''வெங்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும்''

வெங்காரத்தின் சுவை :

இனிப்புடன் கூடிய துவர்ப்பு.

இனிப்பு சுவை உடலிற்கு வன்மை உண்டாகும். அதாவது சுரத்தின் போது ஏற்படும் சோர்வைப் போக்கும். மேலும் துவர்ப்பு குருதியை தூய்மை செய்து சீதத்தை போக்கும்.

பூரம் : (mercury subchloride)

சுவை : உப்பு, கார்ப்பு

தன்மை : வெப்பம்

பிரிவு : கார்ப்பு

சுவையின்படி உப்பு சுவையானது வியர்வையை உண்டாக்கும் மேலும் கார்ப்பு சுவையால் வயிற்றிலுள்ள சீதத்தை போக்குவதோடு ரத்த நாள விரிவு (blood vessel dilatation) ஏற்படுத்தி வியர்வையை பெருக்கி சுரத்தை குறைக்கிறது.

செய்கை : கிரும்நாசினி உடல்கேற்றி

கிருமி நாசினி செய்கையை பொற்றதாலும் இது குருதியில் உள்ள கிருமிகளை கொன்று சுரம் அதிகரிக்காமலும் பார்த்துக் கொள்கிறது.

மஞ்சள் : (Curcuma longa)

சுவை : கார்ப்பு, கைப்பு

தன்மை : வெப்பம்

பிரிவு : கார்ப்பு

ஏற்கனவே கூறியபடி, இதற்கும் கார்ப்பு சுவை, பிரிவு இருப்பதால் சுரத்தை நீக்குகிறது. மேலும் இதன் சுவையான கைப்பாலும் இது வெப்பத்தை நீக்குகிறது.

''நீர்கடுப்பு காசமொடு நீடு விடசுரமும்
அஞ்சியே போகும் மஞ்சள் வத்திரம்
புனைந்தால் ''

- அகத்தியர் குணப்பாடம்

எனவே மஞ்சளானது சுரத்தைப் போக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

எலுமிச்சை பழச்சாறு : (Citrus limon)

சுவை : புளிப்பு

புளிப்பு சுவையுடையதாகையால் அரோசகத்தை போக்கும்

வயிற்றில் உள்ள கபத்தை முறைப்படி அகற்றும்

புளிப்பு : மண் + தீ

தீ பூதத்தை உடையதால் இஃது கபத்தை போக்கி சுரத்தை தணிக்கும்

மேலும் எலுமிச்சை பழச்சாறானது சுரத்தில் உண்டாகம்

வாந்திகட்டும் வாய் குமட்டலுக்கும் சிறந்தது ஆகும்.

இவ்வாறு சந்திரோதயத்தில் சேரும் ஒவ்வொரு சரக்கும் சுரத்தை போக்குவதில் சிறப்பாக பயன்படுகிறது.

அனுபானம்.:

A thing which carries the drug to the system and it sometimes potenciate the drug.

இங்கு அனுபானமாக தேனை குறிப்பிடுகின்றனர்.

தேன் : (Honey)

"பயப்படு பிரசமுன் பழகுமைச் சுரம்

பயப்படு மாறென''

எனவே தேன் இம்மாத்திரைக்கு சிறந்த அனுபானம்

செய்கை : உள்ளழலாற்றி,

எனவே தேனை அனுபானமாக கொடுக்க உடலில் உள்ள பித்தத்தை குறைத்து சுரத்தைப் போக்குகிறது.

சிநேகிதியே

உயர் சிகரத்தை நோக்கி
செல்லும் போது - நீ
என் துணையாக வந்தாய்
வழிகாட்ட ...

துன்பக் கடலில் சிக்கி
தவித்த போது - நீ
எனக்கு கட்டுமரமாக வந்தாய்
காப்பாற்ற ...

போலிப் புன்னகையுடன் பேசி
பழகிய சிலரில் - நீ
என் சிநேகிதியாய் வந்தாய்
நெறிப்படுத்த ....

உனக்கொரு துணைவந்து உன்
வாழ்வு வளமாகும் நேரம் - நீ
என் மனதை காயப்படுத்தினாய்
பிரிவாலே ....

அதனால் என் மனதில் உன்
பிரிவின் ஓலம்
என்றும் மாறாது என்
நட்பின் ஆழம்

அ. லாவண்யா
முதலாம் ஆண்டு

LAUGHTER - THE BEST MEDICINE

- A man filling in an application form for duty in the U.S. Arriys' Counter intelligence corps found himself stopped, and died by this question :

  "Have you or any of your relatives ever comitted Suicide ?"

- We need more clinics all the time with special healing arts, for people falling into love and getting fractured hearts '.

- The doctor said to me, "You're ill.
  You need a quiet life,
  I shall prescribe a sleeping pill,
  But give it to your wife !

- Doctor (to nurse) : "Ask the victor, what his name is ?
  so we can notify this to his family ".

  Nurse (a few minutes later) : He says his family knows his name

- Abdul had submitted a sample of his urine to the doctor and eagerly awaited for the analysis.

  "It is sixty - five percent sugar and thirty - five percent albublin," he was informed.

  "Isn't there any urine in it, doctor ?" Abdul asked, bewildered.

- "Im' sorry to say this, but you have only one hour to live", the doctor told his parent.
  Is there anyone would you like to see ?"
  "Yes", pleased the man, "I like to see another doctor".

- And there's the lush who read so much about the evils of drinking, that he gave up reading !

- We know a gentleman who, after a medical examination, was told by t the doctor that he was in a pretty bad way.
  "Too little blood in your alcohol stream".

J.Gracia
Final Year

DO YOU SUFFER FROM STRESS ?

A.Seyad Sultan Beevi
Final Year

Stress is a part of day to day living. As college students we may experience stress-meeting academic demands, adjusting to a new living environment, or developing friendships. The stress you experience is not necessarily harmful. Mild forms of stress can act as a motivator and energizer. However, if your stress level is too high, medical and social problems can result.

"Stress is defined as a feeling of tension that can be both emotional and physical". There are several signs and symptoms that we may notice when we are experiencing stress. They fail into four categories :Feeling, Thoughts, Behaviour and Physiology.

Do you suffer from examination anxiety ?

A little nervousness before an exam can sharper a person's attention and help him / her to do better, but tension that is persistent and extreme can prone diastrous. The Stress hormones that are released into the blood stream can negatively affect a person's memory.

How to reduce Stress ?

Many stresses can be changed, eliminated or minimized. Here are some things we can do to reduce your level of stress .

- Become aware of your own reactions to stress.
- Focus on your good qualities and accomplishments.
- Avoid unnecessary competition.
- Develop assertive behaviour
- Get a hobby or two, relax and have fun.
- Exercise regularly
- Eat a balanced diet daily.
- Practice relaxation techniques when you feel tense, breathe slowly in and out.

எதிர்பார்ப்புகளும் ஏற்புகளும் !

எதிர்பார்ப்புகள் இல்லா வாழ்க்கை
சலனமில்லா நீரோட்டம் போன்றது !
நட்சத்திரமில்லா வானம் போன்றது !
அலையில்லா கடலைப் போன்றது !
பூவுக்கு எதிர்பார்ப்பு
மலர்வதில் மட்டுமல்ல
பூவையர் ரசித்து கூந்தலில்
ஏற்பதில்தானுள்ளது !

தாய்க்கு குழந்தையிடம்

தான் தூக்கிய குழந்தை,
தானே நடக்க எதிர்பார்ப்பு !
தான் புகழ்ந்த குழந்தையை,
ஊர் புகழ வேண்டுமென எதிர்பார்ப்பு !
தான் ஊட்டிய குழந்தை,
தன் குழந்தைக்கு ஊட்ட வேண்டுமென எதிர்பார்ப்பு !
தன்னலமில்லா இந்த எதிர்பார்ப்புக்கு
ஏற்புகள் மட்டுமே பரிசுகள் !

எஸ். ஸ்ரீவனா
இறுதியாண்டு

சில்லறை சிதறல்

பிச்சைக்காரனின்
துண்டு விரிப்பின்
சில்லறை
சிதறல்களில்
சிரிக்கிறது
சிதைந்து கொண்டிருக்கும்
மனிதநேயம்!

ம. கீதா
ஐந்தாம் ஆண்டு

TIPS FOR HEALTHY LIVING

THENDRAL

Maintain :

a) Water :

- Drink 1 - 3 glasses of warm / cold water in squatting position after rising from the bed in the morning.
- Drink at least 8 - 12 glasses of water everyday with a frequency of one glass every 2 hours.

b) Vital factors :

- Breathe deeply and keep erect posture always.
- Cultivate the habit of passing the motion twice a day
- Bathe twice a day with cold / natural water.
- Pray / meditate twice a day. Once in the morning before sunrise and once at night.

c) Rest :

- After every meal, pass urine and relax in Vajrasana for 5 to 15 minutes.
- Sleep on a medium / hard bed with a thin pillow.
- Forget your worries and be relaxed when you go to bed.
- Cultivate the habit of sleeping on abdomen or on the right side.
- Keep three hours gap between dinner and bet time.

d) Exercise :

- Early morning walk briskly / jog for 30 minutes.
- Do exercise / asanas / surya namaskars/ gardening/ Swimming / Play games etc.
- Stroll after dinner for 15 to 20 minutes.

e) Food :

- Chew well and eat slowly and calmly
- Eat according to your hunger, but fill only 3/4 of your stomach.
- Ideal time for lunch is between 9 a.m and 11 a.m and dinner 5 to 7 p.m.
- Take only two meals a day (with a gap of 7 hours)
- Use any grains / seeds after Soaking them in water over night.
- Take dried fruits after soaking them in water overnight.
- Let a part of your meal consist of cereals and another of vegetables.
- Do not mix cooked and raw diet.
- Use only pure oil having unsaturated fats such as Sunflower / gingily oil.
- Take more of raw food - sprouts, fresh - green - leafy vegetables, seasonal fruits, Salads, Juices, raw Chutney, lemon - honey - water, prefer butter milk and curds to milk.

f) Cooked food

- Whole flour, unpolished rice and gruel. Preferably use Steam - cooked food and Soup.

"THE LORD"

Nor did he hide any treasure from me;
Nor did he seek any measure from me;
Measure - in the sense of passion, I show to him;
He, has enriched my life with the opened gift,
The opened gift - the World, the Happiness, the Truth,
Within which he enrolled the secret of Wit:
Wit - to reason, Wit - to notion,
And the ultimate Wit - to reach the goal of life
To seek, To knock and To search him - "THE WISDOM".

G.YAMUNA
Fourth Year

குருதிக் கொடை

வையத்தில் இருசாதி வாக்காய் பிரித்துவிட்டார்
ஔவை நம்பாட்டி அமுதச் சொற்பாட்டி

இட்டார் ஒருசாதி இடாதார் மறுசாதி
ஈந்தார் உயர்ந்தசாதி ஈயாதார் தாழ்ந்தசாதி
எந்தசாதி நம்சாதி என்றெண்ணி நாமும்
ஈந்து உயர்சாதியிலே சேர்ந்துவிடல் வேண்டுமிங்கே !

எத்தனையோ கொடை மன்னர்
இருந்துவந்த இந்தநாட்டில் இல்லாமல் போகவில்லை
அத்தனைக்கும் மேலான ஆருபரெ காப்பாற்றும்
குருதிக்கொடை கொடுக்கும் குமணபாரி வள்ளல்கள் !

எமனையும் எட்டிஉதைக்கும் மருத்துவர்கள் இங்கிருக்க
ஏன்பயப்பட வேண்டும் மாந்தர் குலம் ?
அன்புள்ளம் கொண்டவர்கள் பண்புள்ளம் கொண்டவர்கள்
பகையுள்ளம் அற்றவர்கள் மருத்துவர்கள் என்றுணர்க !

ஆன்றோரே சான்றோரே அன்புள்ளம் கொண்டவரே
கருணையுள்ளம் கொண்டவரே கடவுளின் உயர்ந்தவரே
நம்மினம் காத்திடவ நல்லவரே வல்லவரே
குருதிக் கொடை கொடுத்திடுவீர் குன்றாப்புகழ் பெற்றிடுவீர் !

பெ.செந்தில் முருகன்
- முதலாமாண்டு

தொட்டில் குழந்தை,

வானக் கூரையில் நட்சத்திர ஆணி அடித்து
வானவில் சேலையில் ஆணைக் கட்டி
மின்னல் கம்பியில் தொங்கவிட்டு, தென்றல் வீச
பூமித்தாய் நிலவைக்காட்டி, மழை அமுதத்தை ஊட்ட
குயில் இசையின் தாலாட்டில் உறங்குகிறேன்.
மனிதனே என்னை எழுப்பிவிடாதே !

வே.கீதா
இறுதியாண்டு

இந்தியா நடே

தொழிற்சாலையில் இருக்கிறது மினசாரம் !
குடிசையில் எங்கே மின்சாரம் ?
'பூமி ஏங்குகிறது தினமும் மழைக்காக
மனிதன் ஏங்குகின்றான் பணத்திற்காக
கழுதை சுமப்பது பொதி மூட்டையை
மனிதன் சுமப்பது வேதனையை
பணக்காரர்களுக்கு நோய் அதிகம்
ஏழைகளுக்கு இன்பம், அதிகம்
படிப்புக்கு தகுந்த வேலை தேவை
வேலை கிடைக்க பணம் தேவை
தொலைக்காட்சிக்கு மின்சாரம் தேவை
மின்சாரத்திற்கு பணம் தேவை !

ம.கோபிகிருஷ்ணன்
முதலாமாண்டு

நண்பா !

தடுமாறி
தடம் மாறி
பேதை வயதில்
போதைக்குள் புதைவதேனோ ?
நண்பா !
சாதிக்கும் வயதில்
சாகத் துடிப்பதே னோ ?
நண்பா !
போதும் விழித்தெழு
உன் புகழொளியில்
விடியல் காண
காத்திருக்கிறது
உலகம்

சு.பிரபா
முதலாமாண்டு

நட்பு

உறவுகளில் தாய்மைக்கு நிகரானது !
உணர்வுகளில் அமைதிக்கு கருவானது !

எந்த பால் வேறுபாடும் அற்றது !
எதிர்பார்ப்புகள் என்றும் கொண்டது !

நண்பரின் நன்மைக்கான எதிர்பார்ப்பு கொண்டதல்ல ;
நட்பின் பெருமைக்கான எதிர்பார்ப்பு கொண்டது !

வாழ்க்கையில் புகழ்பெற ஒழுக்கம் முக்கியம் ;
வாழ்வில் வெற்றிபெற நட்பு முக்கியம் !

நம்மை நாமாகவே இருக்கவைப்பது நட்பு !
நமக்கென்றும் வெற்றியை தருவது நட்பு !

குருவிக்கூடு போன்றது நட்பு ;
குருவிகள் பறந்தாலும் கூடு என்றும் குருவிகள் புகழ்பாடும் !

நட்புடன்
இரா. காஞ்சனா தேவி

மழை

மரத்தை வெட்டியாகம் செய்து
மழைக்காக மன்றாடுகின்றாய்
கழுதைக்கு திருமணம் செய்துவிட்டு
கனமழைக்கு காத்திருக்கிறாய்
ஊரைக் காலி செய்துவிட்டு
உற்று உற்று பார்க்கிறாய் வானத்தை
பேருக்கு மழை நீரை சேகரித்துவிட்டு
பதித்துவிட்டாய் உன் பெயரை பட்டியலில்
ஊருக்குள் ஏரியைத் தூர்த்துவிட்டு
எழுதினாய் உன் பெயரில் பட்டாவை
செய்யதெல்லாம் செய்துவிட்டு
செய்தும் பார்க்கிறாய் செயற்கை மழைக்கு

கோபமுடன் மழை



by,
ச. இந்திரா
மூன்றாமாண்டு



முதலாம் ஆண்டு





தென்றல்

நிர்மல் குமார்
இரண்டாம் ஆண்டு

சிமிழ் செதுக்கிய சிற்பமாய்!
சிந்தனைக் களஞ்சியமாய்!
சித்தர்களின் குரலாய்!
சிறகடித்துப் பறக்கட்டும்
பொற்பேழையாய்!

வாழ்க!
மாணவக் கண்மணிகள்
களப்பணியும்
தொண்டும்!

தமிழ் மருத்துவக் கழகம்

(பதிவு பெற்றது)

17, சாய் நகர் முதல் பிரதான சாலை,
விருகம்பாக்கம்,
சென்னை.

இருப்பாய் தமிழா நெருப்பாய்!

Dr.A.Dhanaselan ,
MD(S)
Siddha
Constultant,
No.5 Rajaji Street
Karur

Bata Shoe Mart,

812, Thinnappa
Complex,
Jawahar Bazar,
Karur

Shree Gokul Finance,
847, Jawahar
Bazar, Karur

KPM PATTU CENTRE,
No.1, Jawahar
Bazar, Karur

இனிய 10-வது ஆண்டில்

S.K.

சித்த மருத்துவமனை



சித்தா பாலியல் ஆலோசனை மையம்

SIDDHA SEXUAL CARE CENTRE

Dr. G.S. பூர்ண சந்திரக்குமார், B.S.M.S
Dr. S. அன்புமலர், B.S.M.S
"S.K." சித்த மருத்துவமனை
Dr.வெங்கட்ராமன் வீதி
கோபி, ஈரோடு (மாவட்டம்)
Ph: 226002 (c), 241214 (R)

வாழ்க வளமுடன்!

B. SURESH BABU,

VYASAV INFOTECH,

FIRST AGRAHARAM,

SALEM

Cell: 98420 05465

Res: 04298 279100

Ph:262 31857

B.V. INDUSTRIES

No.84/1-A, Sidco Industrial Estate,
Ambattur,
Chennai - 600 098.

Manufacturers of
Grey Iron Castings &
Fabrication of Pipes &
Fittings

With Best Compliments from

AGATHIYAR SIDDHA - AYURVEDA CLINIC & PHARMACY

DR.G. HARIKRISHNAN,
B.S.M.S.,D.A.,
No.103, 1st Floor,
Ashok Nagar Main Road,
Kodambakkam,
Chennai - 600 024.
(R) Ph : 24988967
Cell : 98414 29296

நன்றியுரை

அன்புள்ளங்களுக்கு

வணக்கம்.

கல்லூரியின் ஐந்தாவது மலராக பஞ்ச உலோகங்களின் பத்தரை மாற்றுத் தங்கமாக பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். சித்தர்களின் அறிவியல் கருத்துக்களை அழியா புகழ்பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுதான் இப் பொற்பேழை.

முயற்சி சிறகசைத்தால் முடிவில்லா வானமும் முன்னேற்றத்தின் இலக்காகும் என்ற வாக்கிற்கிணங்க பல படிகளை ஏறி வந்து இப்பொற்பேழையை உருவாக்கியதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கல்லூரி நந்தவனத்தில் தொடர்ந்து மூன்றாவது முறை மலர் பூத்த காரணத்தால் பலர் செடிகளுக்கு நீர் ஊற்றத் தயங்கியபோதும் இயற்கை அன்னை மழையாக மரிப்பித்து மானம் காத்தாள் மலருக்கு.

மலரினை மாலையாகத் தொடுப்பதற்கு விளம்பரங்களையும், நன்கொடைகளையும் சேகரித்து வந்து குவித்த என் அருமை உள்ளங்களுக்கும்,

பொற்பேழையின் தரத்தினை உயர்த்தவும், தரணி போற்றும் வகையில் பரணி பாடவும் பத்தரைமாற்றுத் தங்கமாக படைப்புகளை நல்கிய சித்த மருத்துவ அறிஞர் பெருமக்களுக்கும், மாணவ மணிகளுக்கும்,

மலர் வெளியிட உறுதுணையாய் இருந்த கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், மாணவர் பேரவை ஆசிரிய ஆலோசகர் அவர்களுக்கும், மாணவர் பேரவை மற்றும் மலர்க்குழுவின் ஆசிரியர் பொருளாளர் அவர்களுக்கும் மற்றைய ஆசிரிய பெருந்தகையினருக்கும்,

பொற்பேழை உருவாக்கும் பணியில் அனைத்து நிலைகளிலும் கனிவுடனும் கண்ணியத்துடனும் எங்களுடன் இணைந்து ஆலோசனைகளை வழங்கி மலர் சிறப்பாக வெளியிட வழிகாட்டிய மலர்க்குழு ஆசிரிய ஆலோசகர் மற்றும் சிறப்பாசிரியர் அவர்களுக்கும் ,

இப்பொற்பேழைக்கு வாழ்த்துச் செய்தி தந்த அமைச்சர் பெருமக்களுக்கும், ஆணையர் இந்திய மருத்தும் மற்றும் ஓமியோபதித்துறை அவர்களுக்கும், தலைவர் இந்திய நலவாழ்வு நல்லறம் அவர்களுக்கும்,

இப்பேழையை பொற்பேழையாக உருவாக்கி அமைத்த கலை கணினியகத்தாருக்கும், அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

புதையலைக் கண்டேரா!

ச. சசிக்குமார்
மலர்க்குழு
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
சென்னை

